museum of modern
and contemporary art
sri lanka

Quarterly Newsletter #5 – November 2023

**Frieze Week லண்டனில் 'அந்நியர்' கண்காட்சி**

MMCA இலங்கை ஒக்டோபர் 12 அன்று லண்டனில் எங்களின் கடைசி கண்காட்சியான 'அந்நியர்' கண்காட்சியில் மாலை நேரம் நிகழ்த்திய கலைஞர்களின் திரைப்படங்கள் விற்றுத்தீர்ந்தது என அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. 'The Photographers' Galleryயின்' கூட்டிணைவுடன் 'The Photographers' Galleryயில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தினேல்க லியனகே, ஹனியா லுத்வி, இமாத் மயீத், நீனா மங்களநாயகம், சுமுதி சுரவீர ஆகியோரின் படைப்புகள் இடம்பெற்றன. திரையிடல்களைத் தொடர்ந்து, MMCA இலங்கையின் தலைமை எடுத்தாளுனர் ஷர்மினி பெரேரா மற்றும் எடுத்தாளுனர் சந்தேவ் ஹன்டி மற்றும் கலைஞர்களான மங்களநாயகம் மற்றும் ரெஜினோல்ட் எஸ். அலோசியஸ் ஆகியோருக்கு இடையேயான உரையாடல், இங்கிலாந்தைச் சேர்ந்த எடுத்தாளுனரும், எழுத்தாளரும் ஆய்வாளருமான ஹம்மாட் நாசர் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆண்டின் Frieze வாரத்தில் (ஒக்டோபர் 11–15) திரையிடல்களின் மாலை மற்றும் கலந்துரையாடல் என்பன நடைபெற்றன.

**'அந்நியர்' கண்காட்சி வெற்றிகரமான முடிவை எட்டுகிறது**

அதேசமயம், 10,377 பார்வையாளர்களை ஈர்த்த ஆறு மாத ஓட்டத்திற்குப் பிறகு 'அந்நியர்' கண்காட்சி அக்டோபர் 22 அன்று நிறைவடைந்தது. நாங்கள் தொகுத்து வழங்கிய 64 பொது நிகழ்ச்சிகளில் ஒன்பது கலரி உரைகள், எட்டு பயிற்சிப்பட்டறைகள், ஐந்து வாசிப்புக் குழுக்கள், 11 எடுத்தாளுனர் சுற்றுப்பயணங்கள், மூன்று ஆற்றுகைகள், குழந்தைகளுக்கான புத்தக வாசிப்பு மற்றும் தனுஷ்க மாரசிங்க மற்றும் கே. கே. ஶ்ரீநாத் சதுரங்கவின் ஆற்றுகையான 'Text-ing-Be-ing' (2019) ஆகியவை

Groundfloor, Crescat Boulevard
89 Galle Road
Colombo 03

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

‘அந்நியர்’ கண்காட்சியில் அடங்கும். எவ்வாறாயினும், ‘தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்’ உட்பட நாடு முழுவதிலும் உள்ள பள்ளிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிலிருந்து 518 மாணவர்களின் வருகையால் நாம் மிகவும் உற்சாகமாக இருக்கிறோம்.

வழமை போலவே, MMCA இலங்கையின் வருகை கல்வியாளர்கள் கண்காட்சியில் எமது பார்வையாளர்களை ஈடுபடுத்துவதில் இன்றியமையாத பங்கைக் கொண்டிருந்தனர், மேலும் ‘அந்நியர்’ கண்காட்சிக்காக 805 ஸ்பாட்லைட்கள், 63 காட்சிச் சுற்றுப்பயணங்கள் மற்றும் 95 கண்காட்சி சுற்றுப்பயணங்களை நடாத்தினார்கள்.

மேலும், UAE (ஐக்கிய அரபு அமீரேட்ஸ்) இன் கடந்த மாதம் ‘The National’ இதழின் ‘கலை மற்றும் கலாசாரம்’ பிரிவில் ‘அந்நியர்’ கண்காட்சி பற்றிப் பிரசுரிக்கப்பட்டது. இந்த அற்புதமான விமர்சனத்திற்கு ஷாஹிமா ஃபாஹிமுக்கு மிக்க நன்றிகள்.

சிறுவர் தினத்தைக் கொண்டாடும் வகையில், செப்டம்பர் 30 மற்றும் ஒக்டோபர் 1 ஆகிய திகதிகளில் சில சிறப்பு பொது நிகழ்ச்சிகளை நடத்தினோம், அதில் 4 குழந்தைகளின் செயற்பாட்டு அமர்வுகள், ஒரு பட்டறை மற்றும் எமது தலைமை எடுத்தாளுனர் ஷர்மினி பெரேராவின் சிறுவர்தின சிறப்பு எடுத்தாளுனர் சுற்றுப்பயணம் போன்றன அடங்கும். கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகள்!

**சேகரிப்பாளர் அனோஜி அமரசிங்கவின் சிறப்பு வருகை**

‘அந்நியர்’ கண்காட்சிக்குத் தாராளமாக ஆதரவளித்த லண்டனை தளமாகக்கொண்ட சேகரிப்பாளர் அனோஜி அமரசிங்க ஆகஸ்ட் 24 அன்று அருங்காட்சியகத்தில் ‘சமகாலக்கலைக்கு யார் பயப்படுகிறார்கள்’ என்ற தலைப்பில் எமது தலைமை எடுத்தாளுனர் ஷர்மினி பெரேராவுடன் உரை நிகழ்த்தியமையை எண்ணி மகிழ்ச்சியடைந்தோம். அனோஜியும் ஷர்மினியும் கலைப் போசிப்பின் புதிய வடிவங்கள், சிறந்த புரவலரை உருவாக்குவது மற்றும் சமகாலக்கலையை ஆதரிப்பதில் எவ்வாறு ஈடுபடுவது என்பது பற்றிப்பேசினர்.

**ஆரம்ப கிறிஸ்துமஸ் பரிசுகள்**

இந்த கிறிஸ்துமஸில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டளவில் இருக்கும் பதிப்பு சரோன்கள் மற்றும் தாவணிகளை பரிசாக வழங்குங்கள்! Selyn மற்றும் MMCA இலங்கையினால் உருவாக்கப்பட்ட தனித்துவமான இந்த கையால் வடிவமைக்கப்பட்ட துணிகள் இரண்டு ஜோர்ஜ் கீட்டின் (1901–1993) ஓவியங்களால் செல்வாக்குப் பெற்றவை. அனைத்து கலை ஆர்வலர்களுக்கும் இவற்றை விட, உங்களுக்கோ அல்லது உங்கள் அன்புக்குரியவர்களுக்கோ சிறந்த கிறிஸ்துமஸ் பரிசுகள் எவையாக இருக்கமுடியும்? உங்கள் மட்டுப்படுத்தப்பட்ட பதிப்பில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் தாவணி அல்லது சரோங்கை கொள்வனவு செய்ய, MMCA இலங்கையின் Instagram பக்கம் instagram.com/mmcasrilanka/ அல்லது Facebook பக்கம் facebook.com/mmcasrilanka/ இல் நேரடி செய்தியை அனுப்பவும்.

**‘88 ஏக்கர்கள்: மினெட் டி சில்வாவின் வடபுமுவ வீட்டுத் திட்டம்’**

முன்னோக்கிப் பார்க்கும்போது, ‘88 ஏக்கர்கள்: மினெட் டி சில்வாவின் வடபுமுவ வீட்டுத் திட்டம்’ என்ற தலைப்பில் எங்களது அடுத்த கண்காட்சி நவம்பர் 30 அன்று திறக்கப்படும் என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஷர்மினி பெரேரா மற்றும் ரிட்செல் மார்செலின் ஆகியோரால், தினால் சஜீவா மற்றும் நிமயா ஹாரிஸ் ஆகியோரின் உதவியோடு, ‘88 ஏக்கர்கள்’ MMCA இலங்கையின் முதல் தனிக் கண்காட்சியாக அமையும். மேலும் இது இலங்கையின் முன்னோடிக் கட்டடக் கலைஞர் மினெட் டி சில்வாவின் (1918–1998) வடபுமுவ வீடமைப்புத் திட்டத்தைப் பற்றியதாக இருக்கும். அத்துடன் உலக நினைவுச்சின்னங்கள் நிதியத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற இலங்கையின் ஒரு நவீன கட்டடக்கலைஞரின் முதல் கண்காட்சி இதுவாகும்.

இருஷி தென்னகோன் (பி. 1989), சுமேத கெலேகம (பி. 1988), மற்றும் சுமுது அதுகோரல (பி. 1980) ஆகியோரின் ‘is this an architectural documentary?’ (2023) என்ற தலைப்பில் கலைஞர்களின் திரைப்படத்தின் முதல் காட்சியும் ‘88 ஏக்கர்கள்’ கண்காட்சியில் இடம்பெறும். இத்திரைப்படம் வடபுமுவ வீடமைப்புத் திட்டத்தில் கவனம் செலுத்தும். இத் திரைப்படமானது பிரிட்டிஷ் கவுன்சில் டிஜிட்டல் நிதியால் அனுசரணையை கொண்டதாகும். இந்நிதியானது பிரித்தானிய மற்றும் ஏனைய நாடுகளில் டிஜிட்டல்

முறையில் இணைந்து செயல்படுவதை வெளிக்கொணரும் திட்டங்களுக்கு அனுசரணை வழங்கும். MMCA இலங்கையால் தருவிக்கப்பட்ட, ஆய்வு மற்றும் அபிவிருத்தி துணையானது பிரித்தானிய Forensic Architectureஆல் வழங்கப்பட்டுள்ளது.